# மதுக கலசம்



கவிஞர்

ஏ. எம். அபூபக்கர்

AVEKANAI
5/2, FIRST LANE,
RATMALANA

# மதுக் கலசம்

கவிஞர். அபூபக்கர்

VIJAYALUCKSHMI BOOK DEPOT
BOOK SELLERS & STATIONERS
248, GALLE ROAD,
WELLAWATTE
COLOMBO - 6

முதற்பதிப்பு
ஜுன் 1969
உரிமை: ஆசிரியருக்கு

விலை ரூபா 2/

நூர் பிரிண்டிங் கம்பனி, சாய்ந்தமருது.

டாக்டர் மு. வரதராசன் அவர்கள்
அன்போடு தந்த

# முன்னுரை

உண்மை எங்கு இருந்தாலும் விளங்கும்; எவரிடம் இருந்தாலும் அனைவர்க்கும் பொதுவாகி ஓங்கும்; உண்மை நாடு, மதம் முதலான எல்லை வரையறைகளையும் கடந்து ஒளிர வல்லது. உண்மையை நாடி உணர்ந்து பயன் பெற்ற பலரும் கண்டது இது. கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து முதலான வேறுபாடுகளைக் கடந்து உண்மையை நாட வல்ல அறிஞர்களே இனி உலகுக்குத் தேவை.

கவிஞர் திரு. அபூபக்கர் இயற்றிய 'மதுக் கலசம்' என்னும் இந்நூல் ஆன்மீகம் பற்றிய உண்மைக் கூறுகள் சிலவற்றை எடுத்துரைப்பதாகும். உமர் கயாமின் செய்யுள் நடையை அவர் பின்பற்றிய போதிலும், சில இடங்களில் கருத்துக்களைப் புதிய போக்கில் நின்று உணர்த்தியுள்ளார். உலோகாயதத்தைக் கடந்து தெளிவாக்கியுள்ளார்.

உலகம், கவிஞர்க்கு வேசியின் கவர்ச்சியாகிறது. இறைவன் திருவருளே காதல் நங்கை; இறைவனிடம் செலுத்தும் அன்பே மது. நிலையில்லாத உலக வாழ்வின் இயல்பை உணர்ந்து, நிலையான அருளின்பத்தை நாடுவதே நோக்கம்.

பாடல்கள் யாவும் தெளிவான நடையில் செம்மையாக அமைந்துள்ளன. உள்ளத்து உணர்வுடன் ஒன்றிடும் பாங்கைப் புலப்படுத்துகின்றன. கவிஞரின் இந்த நன் முயற்சி பாராட்டுக்கு உரியதாகும்.

மு. வரதராசன்

# — என்னுரை —

ஆத்மீகத் துறை பற்றிய கவிதைகள் தமிழில் மிகக் குறைவாகவே உள்ளன. இத்துறை பற்றிப் பாடும் கவி ஞர்களும் இக்காலத்தில் இல்லை என்றே சொல்லலாம். இந் நிலையில் 'மதுக்கலசம்' என்ற தொடரில் இயற்றப் பட்ட எனது கவிதைகள் தமிழில் ஆத்மீகத் துறை பற்றிப் பாடும் கவி ஞர்களின் தோற்றத்திற்குக் காலாக அமையலாம் என்ற நம்பிக்கை எனக் குண்டு. இத் தொகுதியிலுள்ள கவிதைகள் ஆழ்ந்து படிக்கப்பட வேண்டியவை. நுனிப்புல் மேயும் வாக்கில் மேலோட்டமாகக் கவிதைகளைப் படித்து விட்டு என்னை யும் எனது கவித்துவத்தையும் தவருகப் புரிந்து கொள் ளக் கூடாது என்று வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; ஆத்மீக சிந் தைக்கு விருந்தும் போதையும் நல் கும் எனது "மதுக்கலசம்" என்ற இந்த நூலைப் படிப்பவர்களை எனக்காக இறைவனிடம் தமது இரு கரங்களையும் ஏந்தி "ஏ இறைவனே! இந் தக் கலசத்தை வனைந்த குயவனை-கவிஞனை உன்னையே நினைந்து நினைந்து பாடுபவனுகவும், உன் லீலைகளிலே யே மனம் மகிழ்பவனுகவும் உன் சுகத் தையே நாடி நாடித் தேடுபவனுகவும் ஆக்கிவை!" என்று பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என் கவிதைகளைப் போற்றுபவர்கள் இந்தப் பிரார்த்தனையை மட்டும் காணிக்கையாகத் தருவார்களாயின் அதனை யான் கோடிப் பொன்னிலும் மெறுமதி மிக்கதாய்க் கருதி மகிழ்வேன்.

எனது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் தமக்கே உரிய பாணியில் முன்னுரை நல்கிய டாக்டர் மு. வரதராசன் அவர்களுக்கு நான் என்றும் கடப்பாடுடையேன்: நூலை ஆக்குவதில் அவ்வப்போது ஊக்கமொழிகள் கூறி உற்சாகமூட்டிய ஜனாப் எம். எச். ஏ. சமது ஆசிரியர் அவர்களுக்கும், பிரதி செய்வதில் உதவி புரிந்த ஜனாப் நூர் முகம்மத் காரியப்பர் அவர்களுக்கும் எனது நன்றி என்றும் உரியது.

*கவிஞர். அபூபக்கர்*

*சாய்ந்தமருது-3*
*கல்முனை.*
1-7-69.

# மதுக் கலசம்

வானக் காவின் மீனெல்லாம்
வாடித் தூக்கம் கொள்கையிலே
மோன நிலையில் நின்றவொரு
முதிய வேடன் கண்ணிகளால்
தீன முற்ற இருட்குருகைச்
சிறையில் இட்டுச் சென்றனனால்
கானப் பறவை போல் வானம்
களியே கொண்டு சிரித்ததுவே. 1.

இருளின் செல்வி சிறைகொண்டாள்
இரவி வேடன் களிகொண்டான்,
உருளும் பனிநீர்த் துளிகளெலாம்
உருகி ஒட்டிப் போயினவே,
மருண்டு நின்ற பூக்களெலாம்
மலர்ந்து நெஞ்சம் களித்தனவே,
கருகி நின்ற கீழ் வானம்
கருமை நீங்கி வெளுத்ததுவே. 2.

2.

ஞானச் சுடரோன் கீழ் வானில்
சோதி செய்ய எழுந்தனனே,
மோனத் திரையை நீக்கியொரு
மோட்சம் ஈயப் பிறந்தனனே,
தீன முற்ற ஆன்மாவின்
திமிரம் கௌவப் பிறந்தனனே,
வானப் பந்தர்க் கீழுலகம்
விடிவு காணப் பிறந்தனனே!

3.

பானம்* பருக விழைவோரே!
பானம் தருவேன் வாருங்கள்,
ஏனம் கொண்டு வாருங்கள்
ஏந்திச் சென்று பருகுங்கள்.
மோன நிலையில் வெறிகொண்டு
மூர்ச்சை யாகி முதலோனின்
கானக் குரலைக் கேளுங்கள்
களித்து நின்று கூவுங்கள்!

4.

* *பானம்-ஞானம்;*

ஓடிச் சோர்ந்த குருகைப் போல்
ஒடிந்து நிற்கும் மானிடனே!
ஆடும் உந்தன் ஆன்மாவுக்
கரிய மருந்து கொணர்ந்துள்ளேன்,
ஓடி வந்தே ஒரு கிண்ணம்
இனிய திராட்ச மதுபருகு,
வாடிச் சோர்ந்த நிலைநீங்கி
வலிய ஊக்கம் பெறுவாயே!

5.

வாராய் நண்பா! பூங்குயிலாள்
வண்ண மதுவின் கலசமதை
நேரா யிங்கே எனைநோக்கி
நீட்டி வந்து நிற்கின்றாள்,
ஆரா மதுவில் ஒரு கிண்ணம்
அருந்தி உள்ளம் களிப்போமே,
பாரை விட்டுப் பறந்தேகிப்
பசிய சொர்க்கம் செல்வோமே!

6.

சோர்ந்த நிலையிற் சோலையிலே
சேர்ந்து நின்ற எனைக்கண்டே
ஆர்த்து வந்த ஒரு பறவை
அருகில் நெருங்கி "ஏ நண்பா!
வார்த்து மதுவில் ஒரு கிண்ணம்
வாயில் வைத்துப் பருகுவையேல்
ஏர்வு கொண்டு சுகம் பெறுவாய்''
என்று சொல்லிப் பறந்ததுவே!

7.

மோன நிலையில் முகம் வெளிறி
முடிவை நோக்கிச் சொன்றவொரு
வானம் பாடிப் பறவையதன்
வறிய நிலையைக் கண்டுருகித்
தீனம் நீங்கி உடல் தேறத்
திராட்சை மதுவைப் பரு(க்)கியதும்
மோனம் நீங்கிச் சிறகுகளை
விரித்துப் பறந்து சென்றதுவே.

8.

இருக்கும் வாழ்வு சிறிதேயாம்
இன்னும் இருத்தல் சரியாமோ?
அருத்தி யோடு மங்கையினை
அணைத்து மதுவில் ஒரு கிண்ணம்
உருக்கும் ஆன்ம நோய்தீர்க்க
உண்ணு திருந்தால் அதற்குள்ளே
சிரிக்கும் நிலைக்கு நாமிங்கு
செத்து விட்டால் என்செய்வோம்?
9.

போற்றும் உலக வாழ்க்கைவெறும்
போலி யல்லால் மெய்யில்லை,
ஆற்று நீரின் குமிழியென
அழிந்து சென்று போய்விடுமால்,
ஏற்ற மான திராட்சை தரும்
இனிய மதுவை உறமாந்தி
நாற்ற மெடுக்கும் பூவுலகை
நினைவை விட்டும் நீக்கிடுவோம்!
10.

'எண்ணிற் சிறந்த வாழ்க்கை எது'
என்று கேட்கும் நண்பர்க்குத்
திண்மை சேர்என் இதயத்தைத்
திறந்தே உண்மை சொல்லிடுவேன்,
வண்ண மலராம் கலசமுடன்
வாடா மலராம் மங்கையுமே
தண்ணார் வாழ்வின் லெட்சியமாம்
தீரா இன்ப வாழ்க்கை இதே! 11.

உருளும் உலகம் ஒருநாளும்
ஒழியா திருக்கப் போவதில்லை,
மருளும் விழிகள் காண்பதுவோ
மாயை யல்லால் வேறில்லை,
அருளும் மங்கை அவளேதான்
அழியா திருப்பாள்; அவளியும்
பொருளாம் புதிய மதுவேதான்
பொன்றா இன்பம் தருமாமே! 12.

மலர்ந்து புதிய மணம்வீசி
மகிழ்ந்து நின்ற மலர்களெல்லாம்
உலர்ந்து வாடிச் சேற்றினிலே
உதிர்ந்து கருகிப் போயினவே,
புலர்ந்து விடியும் பொழுதினிலே
புதிய கானம் தந்தகுயில்
கலந்து மண்ணில் மண்ணுகிக்
கரந்து போதல் காணீரோ?

13.

வாரி வாரித் தருமமெலாம்
வழங்கி வந்த கனவான்கள்
பாரில் மறைந்து மண்ணேடு
மண்ணே யாகிப் போயினரே,
தாரீர் என்று கேட்டபினும்
தந்தே உதவாச் செல்வர்களும்
பாரில் மறைந்து மண்ணேடு
மண்ணே யாகிப் போயினரே

14.

பொன்னை நிகர்த்த பூவெல்லாம்
பிய்ந்து வாடிப் போயினவே;
மின்னை நிகர்த்த மணியெல்லாம்
மண்ணில் உடைந்து சிதறினவே,
அன்னை, அப்பன், முன்னோரும்
அழிந்து மறைந்து போயினரே,
பின்னும் ஏனோ பூவுலகில்
பின்னிப் பிணைந்து கிடக்கின்றாய்?
15.

நேற்று வாழ்ந்த நம் முன்னோர்
நுழைந்த இடமும் எவ்விடமோ?
ஆற்றல் கொண்ட படையினரும்
அடைந்த இடமும் எம்விடமோ?
போற்றும் இந்தக் காசினியில்
புதிய மதுவே அழியாதால்,
தேற்றம் உறவே ஒருகிண்ணம்
தேடிப் பருக மாட்டாயோ?
16.

நில்லா உலகில் நித்தியமாய்
நெடிது வாழ்ந்தோர் யாரப்பா?
எல்லா நாளும் அரசாண்ட
ஏந்தல் கோமான் யாரப்பா?
செல்வச் சீமான் ஏழையுடன்
சீலக் கோமான் அடிமையுமே
பொல்லா உலகின் மண்ணுள்ளே
புதைந்த புதினம் காணுயோ?
17.

சீன அரசின் சிருங்காரச்
சிம்மா சனமும் எங்கேயோ?
ஆன உலகம் யாவையுமே
ஆண்ட சுலைமான் எங்கேயோ?
ஊன மில்லாப் பார்ஸீயின்
உயர்ந்த முடிகள் எங்கேயோ?
யானும் நீயும் முன்ஞேர்போல்
இறப்பைத் தழுவ வேண்டுமடா!
18.

எண்ணி ஒருதுண் டெலும்புக்காய்
எதிர்த்து நிற்கும் நாய்போலாய்க்
கண்ணி போன்ற உலகுக்காய்ச்
சண்டை செய்யும் மானிடரே!
உண்மை ஒன்று நான்சொல்வேன்
உற்றுச் சற்றே கேட்டிடுவீர்,
வெண்மைப் பருதி போல் வந்தீர்
வெட்டும் மின்னல் போல்மறைவீர்!
19.

வாழ்ந்து வந்த மனிதரெலாம்
விரைந்து சென்ற தெவ்விடமோ?
மீளா வுலகின் ஆசையிலே
மிதந்தோர் போன தெவ்விடமோ?
வாழ்ந்து சென்றோர் கோடியடா,
வாழ நினைப்போர் கோடியடா,
தாழ்ந்து மண்ணில் மண்ணாகிச்
சாதல் தழுவ வேண்டுமடா!
20.

ஆளே ஆளைக் சொல்கின்றார்,
ஆசை கொண்டு வாழ்கின்றார்,
தாளின் கீழே மற்றவரைத்
தள்ளி வைக்க முனைகின்றார்,
நாளும் பொழுதும் கோமானாய்
நெடிது வாழ விழைகின்றார்,
மாளா துலகில் நிலையாக
மதிக்க வாழ்ந்தோர் யாரப்பா?
21.

நண்ணும் உடைமை யாவையுமே
நீத்துச் செல்ல வேண்டுமடா,
கண்ணின் மணியாய்க் கொண்டவளைக்
கைவிட் டேக வேண்டுமடா,
எண்ணம் இழந்த நிலையில்நீ
இறந்து போக வேண்டுமடா,
அண்ணே! வரும்அந் நன்னாளை
ஆய்ந்து சற்றுப் பார்த்திடடா!
22.

சோலை வனத்திற் சுதந்திரமாய்ச்
சுற்றிக் கொண்டு செல்கையிலே
காலைத் தழுவிக் கிடந்தவொரு
கலைந்த மலரைக் கண்டுநின்றேன்,
"வாலைப் பெண்ணின் கூந்தலிலே
வடிவு செய்த ரோஜாநான்,
வேலை முடிந்த பின்எந்தன்
வாழ்வும் இதுதான்" என்றதம்மா!
23.

அன்றென் இளமைப் பருவத்தில்
ஆசைக் கனவு பலகண்டேன்.
என்றும் இனிய நினைவுடனே
உலகில் வாழ உளங்கொண்டேன்,
ஒன்றன் பின்னே இன்னொன்றாய்
உதிர்ந்த மலர்கள் கண்டதுமே
இன்று புலரும் பொழுதொன்றே
எனக்குச் சொந்தம் எனக்கொண்டேன்!
24.

* இந்தப் பாடல் நூலாசிரியரின் இளமைக் கால நடுப்பகுதியில் எழுதப்பட்டது. ஆயினும் முதுமையின் நினைவும் அனுபவ உணர்வுமே பாடலுக்குக் கருவாய் அமைந்தன:

குன்றி மணியை நாடியொரு
குப்பை மேட்டைச் சென்றடைந்தேன்,
"நன்றே" என்ற குரல் கேட்டுத்
திரும்பி நின்றேனஎலும்பொன்றே
"அன்று வாழ்ந்த மனிதன் நான்
ஆரோ கேட்பார் என்நிலையை
இன்றே" என்று நோக்கிஎனை
இரந்து நின்று புலம்பியதே!

25.

குன்றி லிருந்து பாடிவரும்
குறுத்த தெண்ணீ ரோடையிலே
இன்று மலர்ந்த மல்லிகையாய்
எழுந்த நீரின் குமிழ்பாராய்!
என்றும் வாழ முடியாமல்
இறந்த தின்னும் கண்டிடுவாய்,
நன்று பின்னும் ஏனோநீ
நெடிது வாழ எண்ணுகிறாய்?

26.

ஏனோ மனிதா! மரணத்தை
எண்ணிப் பயந்து நடுங்குகிறாய்?
ஞானக் கண்ணின் பார்வையிலே
நன்மை மரணம் தந்திடுமால்,
தேனாய் இனிய சுவைபொழியும்
தேடும் மரணம் பெறநாளும்
மோன மூச்சை அடக்குவதால்
மரண மாகப் பயில்வாயே!
27.

நெஞ்சே! நீயும் எத்தனை நாள்
நீச உலகின் ஆசையிலே
தஞ்ச மாக உழன்றழுது
தன்னை அழித்துக் கிடந்திடுவாய்?
வஞ்ச மில்லா மங்கையிலே
வாஞ்சை கொண்டே அவளீயும்
நஞ்ச கலவா மதுவுண்டு
நலமே இன்பம் பெறுவாயே!
28.

அஞ்சேல்! அஞ்சேல்! உனக்கிங்கே
அனைத்தும் அடிமைப் பொருளாகும்,
தஞ்ச முற்றுக் கிடப்பதெலாம்
தரணி யல்லால் நீயில்லை,
விஞ்ச மதுவில் ஒருகிண்ணம்
வாயில் வைத்துப் பருகுவையேல்,
அஞ்சி நிற்கும் அகிலமுமே,
அனைத்தும் உன்னைப் பணியும்மே!
29

உலகில் வாழும் மானிடனை
இறைவ னகச் செய்வதெது?
கலக்க முற்ற ஆன்மாவைக்
களிப்பை அடையச் செய்வதெது?
புலையாம் உலகின் சிந்தனையை
மனத்தில் மறக்கச் செய்வதெது?
கலசம் நிறைந்த மதுவல்லால்
காணும் மற்றோர் பொருளுண்டோ?
30

16.

துன்ப முற்ற ஆன்மாவைத்
தேற்றி நிற்க வல்லதெது?
அன்பை இழந்த நெஞ்சினிலே
அன்பைப் பெருகச் செய்வதெது?
நண்ப ரில்லா வேளையிலே
நண்ப ராக இருப்பதெது?
இன்ப மீயும் பெண்ணல்லால்
உலகில் இன்னோர் பொருளுண்டோ?
31

ஏனோ இந்தப் பாரினிலே
ஏங்கி ஏங்கி அலைகின்றீர்?
கான மிழந்த பூங்குயிலாய்க்
கலக்கம் கொண்டு திரிகின்றீர்?
ஆன கவலை யாவையுமே
அகற்றி உதறித் தள்ளிடுவீர்,
தீனம் நீங்க ஒருகிண்ணம்
திராட்சை மதுவைப் பருகிடுவீர்!
32

அறிஞர் பலரைத் தரிசித்தேன்.
அரிய நூல்கள் பலகற்றேன்,
வறிய நிலையைப் போக்கவென
வளமாம் செல்வம் பலகொண்டேன்,
குறியாய்க் கொண்டு நண்பரினைக்
குதித்துக் குதித்தே இறுமாந்தேன்,
அறிவாய்! மதுவின் பேரின்பம்
இவற்றி லெல்லாம் கண்டிலனே!
33

அறிவிற் கொண்ட காதலினால்
ஆசை யுற்று மருண் டிருந்தேன்,
அறிவின் அழகு போலியென
அறிந்து கொண்ட பின் அவளைப்
பிரிந்து காதற் செல்வியினை
மீண்டும் மணமே செய்துகொண்டேன்
அறிவால் உற்ற தொல்லையினை
அளந்து கூறல் முடிந்ததுவோ?
34

அறிவு கொண்டு பகவானை
அறிய முயலும் மானிடனைச்
செறிந்த முட்டாள் எனநானும்
சிரித்துச் சிரித்துச் சொல்லிடுவேன்,
அறிவு கொண்டு மெய்ப்பொருளை
அடைந்தோர் எங்கும் உண்டுகொலோ?
குறுக்க முற்ற பானையினால்
கடலை அளந்தோர் யாவரடா! 35

தொல்லை கூட்டும் விவேகத்தால்
தொடரும் துன்பம் சொல்வேனோ?
இல்லை, மேலும் காதலினால்
இணையும் இன்பம் சொல்வேனோ?
புல்லின் இதயத் 'தஸ்பீஹை'
புதிராம் அறிவு புரியாதால்,
அல்லும் பகலும் காதலினை
அகத்துள் ஒளிரச் செய்திடுவாய்! 39

சிரிக்கும் ரோஜா மலரொன்று
சிரித்து நின்று கேட்டதுவே,
"இரவும் பகலும் என்னருகே
இருந்து விருந்து தாராயோ?
பருகும் பானம் சிறிதேனும்
பருக்கிவெறியை ஊட்டாயோ?
உருக்கும் கவலை போவதெனில்
இன்ப மதுவே வேண்டுமடா!"

37

எட்டு முழத்தில் துணியொன்றை
இடுப்பிற் கட்டி நின்றவொரு
பட்டிக் காட்டான் எனைநோக்கிப்
பரிந்து கேட்டான் "ஏனண்ணு!
குட்டிப் பெண்ணின் கொங்கைகளில்
குதித்து மகிழ விழைகின்றேன்,
கிட்டப் போனல் நில்லாமல்
கிளம்பி ஓடி ஒளிகின்ருள்."

38

*எட்டு முழத் துணி-- உலக ஆசாபாசம்;
*குட்டிப் பெண்-- இறைவன்;

எட்ட நின்ற அவனருகே
எழுந்து வந்து நான் சொன்னேன்,
"எட்டு முழத்தில் துணியொன்றை
ஏனோ கட்டி இருக்கின்றாய்?
விட்டு வீசி எறிந்ததனை
வனப்பைக் காட்டி நிற்பாயேல்
கிட்ட வந்தே அவளுன்னைக்
கிறக்கம் கொள்ளச் செய்வாளே!"
39

மதுவை விற்கும் கடைகளிலே
மக்கள் கூட்டம் நிரம்பிடுமா?
புதிய மதுவின் கிண்ணமுமே
பருகி மகிழக் கிடைத்திடுமா?
நிதமும் மதுவை ஊற்றிவரும்
'சாகி' தானும் பெறுவேனோ?
புதிய வாழ்வின் தென்றலுமே
முறுவல் செய்து வீசிடுமோ?
40

வாதை நீங்கிச் சுகம்பெறவே
    வண்ண மதுவின் கடைசெல்வீர்,
காத லுற்ற இதயமுடன்
    கனிந்த மதுவைப் பருகிடுவீர்,
போதை யுற்ருேர் சபையினிலே
    புகுந்து நீரும் கலந்திடுவீர்,
கோதை அவளும் உமைநாடிக்
    கூடிப் புணர வருவாளே!

41

ஏற்றமான 'சாகி'யினை
    இன்னே தேடிக் கண்டிடுவாய்,
ஊற்றி வந்தே அவன்நல்கும்
    உண்ணும் மதுவைப் பருகிடுவாய்,
கூற்றம் வெல்லும் வலிமையினைக்
    கலச மதுவே தந்திடுமால்,
ஆற்றல் உறவே ஒருகிண்ணம்
    அருந்தி வீணை மீட்டிடுவாய்!

42

'உண்ணும் மதுவை உண்ணாதே,
என்று போதம் தரும் அறிவால்
நண்ண விருக்கும் பேரின்பம்
நகர்ந்து சென்று போய்விடுமால்,
உண்டு மகிழ ஒருகிண்ணம்
இனிய மதுவைப் பருகிடுவாய்,
எண்ணம் இழந்த பேதையிலே
ஏய்க்கும் அறிவு மாய்ந்திடுமே!

43

திங்கள் வானப் பந்தரின்கீழ்
நீண்டு கிடக்கும் இவ்வுலகம்
தங்கிச் செல்லும் ஓர்மடமாம்,
நீழல் கொடுக்கும் பூமரமாம்;
மங்கும் உலகில் மனிதரெல்லாம்
நீண்ட பயணம் செய்பவராம்,
தொங்கு பயண முடிவின்னும்
சொற்ப பொழுதில் வந்திடுமே!

44

இன்று செய்ய வேண்டியன
யாவும் இன்றே செய்திடுவீர்,
அன்றி நாளை என்பீரேல்
அதற்குள் மாண்டு போய்விடுவீர்,
ஒன்றை மட்டும் நான்சொல்வேன்
உண்மை யாகக் கொண்டிடுவீர்,
இன்று காணும் இவ்வுலகம்
என்றும் இருக்கப் போவதில்லை!

45

வையம் அழியப் போகுதடா,
வாழ்வு முடியப் போகுதடா,
வெய்ய நரகும் சுவனமுமே
வந்து சூழப் போகுதடா,
அய்யோ இன்னும் எத்தனைநாள்
அவனி மீதில் வாழ்ந்திடுவாய்?
உய்ய நீயும் ஆண்டவனை
உன்னித் தொழுது வாழ்வாயே!

46

முயன்று செய்த பிரயாணம்
முடிவை நோக்கி விட்டதடா,
அயர்வு கொள்ளா ஒட்டகமும்
அடையும் நகரும் வருகுதடா,
உயர்வை உலகிற் பெறலாமென்
றெண்ணி இன்னும்,இருக்காமல்
இயலும் வரையில் எம்பெருமான்
அடியைப் போற்றி வாழ்வாயே! 47

ஓடி ஓடி ஓய்வின்றி
ஒசிந்து செல்லும் வண்டியிலே
நாடும் பயணம் மேற்கொண்டு
நலமே இவர்வோர் எத்தனைபேர்?
தேடும் இடமும் வந்ததுவே
துறந்து செல்வோர் எத்தனைபேர்?
பாடிப் புகழும் வாழ்வை இதிற்
பார்த்து மயக்கம் தெளிவாயே! 48

பட்டம் ஏனோ பெறுகின்றாய்?
படித்த தெல்லாம் என்னேடா?
திட்டம், இங்கே கற்றதெலாம்
நெஞ்சத் திருளைப் போக்காதே'
விட்ட மில்லாக் கூரையடா
விழைந்து படித்த கல்வியெலாம்,
பட்ட மரத்தை வளர்க்கின்ற
மூடன் எங்கும் உண்டுகொலோ? 49

வல்லான் ஒருவன் உண்டென்று
வாயைத் திறந்து சொல்கின்றான்,
சொல்லும் செயலும் அவனாகித்
திருந்த வேண்டும் என்கின்றான்,
தொல்லை நீக்கிச் சுகமூட்டும்
தொழுகை என்று சொல்கின்றான்,
சொல்லும் அவனோ கொள்ளையிடும்
சூறைக் கள்வன் ஆவானே! 50

பள்ளி சென்று தொழுகின்ருன்
பக்தர் போல நடக்கின்ருன்,
கள்ள மில்லா வார்த்தைகளால்
கடவுள் பெயரைத் துதிக்கின்ருன்,
அள்ளி அள்ளி அறிவுகளை
அகிலத் தார்க்கு வழங்குகிருன்,
துள்ளும் அவனின் உள்ளத்துள்
தரணி சிக்கிச் சுழல்கிறதே!
51

நாடும் தெய்வம் காணவென
ஞானத் தெல்லாம் தேடுகிருர்,
ஓடி ஆடி உலகெல்லாம்
ஓய்ச்ச லின்றி அலைகின்ருர்,
காடு மேடு பள்ளமெனக்
காய்ந்து காய்ந்து தேடுகின்ருர்,
தேடும் தெய்வம் அவருள்ளே
தேங்கி நிற்றல் காணுரோ?
52

அற்ப சுகத்தை நாடுகின்றீர்,
அன்பு வழியும் தேடுகின்றீர்,
கற்ற கல்வி தனைக்கொண்டு
கடவுள் காண ஏகுகின்றீர்,
உற்ற துயரைத் தாங்கவொணு
உள்ளம் கொண்டு பாடுகின்றீர்,
முற்ற முற்ற ஆன்மாவைப்
புரியா திருக்கும் மானிடரே?

53

நித்தம் நித்தம் இறையவனை
நினைந்து நினைந்து தொழுகின்றீர்,
கத்திக் கதறிப் பலவற்றைக்
கேட்ட வாறே நிற்கின்றீர்,
வித்தை விதைத்து விளைவுக்காய்
விழைந்து நோக்கி நிற்கின்றீர்,
சித்தாய் விளங்கும் அவனோதன்
செவியை மூடி இருக்கின்ருன்!

54

கூவும் உங்கள் கூப்பாடோ
கடவு ளுக்குக் கேளாது,
மேவும் உங்கள் தொழுகையுமே
மண்ணுக் கப்பாற் செல்லாது,
தூவும் கண்ணீர்த் துளிகளெலாம்
தொடர்ந்து பயனைத் தாராதால்,
ஜீவ னில்லா மனவோசை
ஜீவிப் போனை எட்டாதே!

55

தம்மை மறந்தே எனைஎண்ணித்
தவறு ஏனோ சொல்லிடுவார்?
தம்மைப் பற்றி ஒருசிறிதும்
நினையா தெனையேன் எண்ணுவரோ?
தம்மை எண்ணா தெனைஎண்ணும்
நண்பர்க் கொன்று சொல்லிடுவேன்,
தம்மைக் காட்டும் கண்ணாடி
நோக்கு மவர்க்கு நானாவேன்!

56

எண்ணைக் குறைகள் சொல்பவர்கள்
என்னை விட்டுச் சிறிதவரை
எண்ணிப் பார்ப்பின் என்னிலுமே
அதிக குறைகள் தமிற்காண்பார்,
சொன்னால் என்னைக் கோபிப்பார்,
சீற்றம் கொண்டு சீறிடுவார்,
வன்னக் குயிலும் காக்காயும்
வடிவில் ஒன்றாய்ப் போய்விடுமோ?
57

கானக் குயிலைக் கண்டவொரு
கரிய காக்கை கேட்டதுவே,
"தீன முற்ற குரலாலே
திக்கித் திக்கிப் பாடுவதேன்?
ஆன உந்தன் உருவமுமே
அல்லை யொத்த கறுப்பாகும்,
ஏனோ இன்னும் உனைமனிதர்
ஏற்றிப் போற்றிப் பாடுவரோ?
58

பூங்கா வனத்தில் நின்றகுயில்
    முறுவ லொன்று பூத்ததுவே,
ஓங்கி வளர்ந்த காக்கையதன்
    ஒழுங்கை எண்ணிச் சிரித்ததுவே,
"தீங்கு நெஞ்சக் காக்கையரே
    துயரம் என்னிற் கொள்ளாமல்
ஏங்கும் உன்னைப் பாராயோ?"
    என்று சொல்லிப் பறந்ததுவே.

59

நாளே இந்தப் பூவுலகில்
    நலிந்த மலரின் நன்மைக்காய்
ஊன முற்ற சோலையிலே
    இசையைப் பெய்யும் குயிலாவேன்,
கூனல் விழுந்த சொறிநாயும்
    குன்று நோக்கிக் குரைத்திட்டால்
வானை முட்டும் மலைசாய்ந்து
    வீழ்ந்து நொறுங்கிப் போய்விடுமோ?

60

என்னைப் பார்த்தே ஏளனமாய்
எண்ணி நகைப்போர் எத்தனைபேர்?
மின்னும் பளிங்குப் பாறைகளைப்
பொன்னுய்க் கொள்வோர் எத்தனைபேர்?
ஒன்று சொல்வேன் அன்னவர்கள்
உண்மை யாகக் கொண்டிடுவார்,
பொன்னே யல்லால் பளிங்குகளைப்
பார்த்து மருள்வோன் நானல்லன்!

61

கிண்ண மதுவைத் தருகின்ற
கீதம் பாடும் இளநங்காய்!
வண்ண வண்ண மதுவைநீ
வழங்கும் திறமை சொல்வேனே!
எண்ண எண்ண இனிக்கின்ற
இனிய நினைவைச் சொல்வேனே?
கண்ணே உண்ண ஒரு கிண்ணம்
கலசம் மதுவை நிறைம்யமா:

62

நண்ணும் கவிதைப் பொருளெல்லாம்
நீயே யல்லால் வேறில்லை,
எண்ண மெல்லாம் நீயேதான்
எழுது கோலும் உனதேதான்,
மண்ணில் உன்னை இணையானோர்
படைப்பி லெவரும் இலையம்மா,
பெண்ணே! உண்ண ஒரு கிண்ணம்
புதிய மதுவில் நிறையம்மா!

63

உன்னை யல்லால் ஒருவரையும்
உளத்தே எண்ணும் ஆசையிலேன்.
உன்னை யல்லால் வேறெவரும்
உண்மை இன்பம் தருவாரோ
சின்னஞ் சிறிய வாயிதழில்
சுரக்கும் பானம் வேறெதுவோ?
பென்னம் பெரிய வெறியதனைப்
போக்கும் செல்வி நியலவோ?

64

இதய ரோஜா நீயேதான்
இதயப் புறவும் நீயேதான்,
உதய காலத் தென்றலிலே
உலவும் இசையும் நீயேதான்
வதன வான உதடுகளில்
வற்ரு தூறும் அமுதமுடன்
புதிய மதுவில் ஒரு கிண்ணம்
பருக ஊற்றித் தருவாயே!
65

மங்கை, மதுவின் நினைவுடனே
மயங்கித் திரிவோன் என்றென்னைப்
பொங்கிக் குற்றம் கூறிடுவோர்
பேசிப் பேசிச் செல்லட்டும்
எங்கே அவர்கள் புதுமதுவின்
இனிய சுவையை அறிவார் நீ
தங்கக் கிண்ணம் நிறையம்மா,
தீனம் நீங்க ஊற்றம்மா!
66

வட்ட மதியின் முகமம்மா
வார்ப்பி லுற்ற சிலையம்மா
பட்டுப் போன்ற இதழம்மா
பாகு மதுவைத் தருமம்மா,
எட்ட நின்று கூப்பிட்டால்
ஓடி வந்தே இதயத்தின்
வெட்ட வெளியின் நடனமிடும்
வண்ணக் குமரி என்னம்மா!

67

காதல் மதுவைத் தருகின்ற
கோதை என்னை அழைக்கின்றாள்
காதல் மகனைக் காணாமல்
தூண்டிற் புழுவாய் துடிக்கின்றாள்,
மோதும் வாழ்க்கை எனக்கொன்றும்
வேண்டாம், வேண்டாம் போகின்றேன்
மோதி மோதி அவள்மடியில்
மௌன வீட்டில் போலாவேன்.

68

வசந்த காலத் தென்றல் இனி
வந்து மீண்டும் வீசுவதோ?
கசந்து போன வாழ்க்கைஇனி
கன்னற் சாருய் இனிப்பதுவோ?
ஒசிந்து செல்லும் மங்கைஇனி
உண்ணும் மதுவைத் தருவாளோ?
இசைந்த முதுமைக் கீதத்தின்
இன்ப நுகர்ச்சி எய்துவனே? 69

ஆசைப் பெண்ணின் காதலரே!
அடிமை யுற்றுக் கிடப்பவரே!
மோசஞ் செய்யும் அசையினுல்
மதியை இழந்து சுழல்பவரே!
நாசம் செய்யும் ஆசையினை
நனிதே மனத்திற் கொள்வீரேல்
வாசம் இழந்த ரோஜாவாய்
வாடி மெலிந்து போவீரே! 70

ஆசை மனத்திற் கொள்ளாதே,
அடிமை யுற்றுக் கிடவாதே
வேசி போலாய்க் கணநேரம்
மகிழ்ச்சி வழங்கும் உலகின்மேல்
ஆசை கொண்டு வாழ்நாளை
அழித்து நாசம் செய்யாமல்
ஈசன் அவனை எந்நாளும்
இனிது போற்றித் தொழுவாயே! 71

விட்டில் தன்னைப் பாராயோ?
விளக்கும் பொருளைக் காணுயோ?
முட்டி மோதும் ஆசையினுல்
முகிழ்த்த மோகப் பெருவெறியால்
சுட்டுக் கரிக்கும் அக்கினியின்
சுடரைத் தாமம் எனவெண்ணிச்
சட்டித் தீயில் வீழ்ந்துயிரைச்
சிதைத்து நிற்றல் காணுயோ? 72

வையம் இங்கோர் பெண்ணப்பா,
வஞ்சம் நிறைந்த வேசியப்பா,
கையால் எம்மை அழைத்திடுவாள்
காதல் மொழிகள் கூறிடுவாள்,
மையல் தந்து விழிவீச்சால்
மயக்கம் கொள்ளச் செய்திடுவாள்,
பையும் காசை இழந்த பின்னர்
பாரா தோடி மறைந்திடுவாள்!
73

உண்ண உணவும் தந்திடுவாள்
உடுக்க உடையும் அளித்திடுவாள்
கண்ணுக்கினிய குளிர்ச்சியையும்
காட்டி காட்டி மறைத்திடுவாள்,
மண்ணுக் கிறைவன் சிந்தனையில்
மண்ணை அள்ளிப் போட்டிடுவாள்,
பண்ணும் வையக் காரிகையின்
மாயா ஜாலம் சிறிதளவோ?
74

மோசம் செய்து மோகத்தின்
முள்ளால் குத்திக் கீறிடுவாள்
ஆசை காட்டி இழுத்தெம்மை
ஆழக் குழியில் தள்ளிடுவாள்
ஈசன் அடியைப் போற்றாமல்
இருக்கச் சூது செய்திடுவாள்,
வேச உலகின் கொடுமைகளை
விளம்ப யாரோ வல்லாரோ? 75

விரிந்த வையம் எனைநோக்கி
வந்து நின்று சொன்னதுவே,
"பரிந்து யானும் சிரித்தால்உன்
பாவ மெல்லாம் சூல்கொள்ளும்,
பொருந்து மெந்தன் விழிவீச்சில்
பணிந்து பணியாள் ஆகிடுவாய்
பிரிந்து சென்று விட்டாலோ
பின்னால் தேடி வந்திடுவாய்!" 76

ஆட்டக் காரன் அவனம்மா,
ஆடும் பொம்மை நாமம்மா,
பாட்டன் பூட்டன் என்றுசொலிப்
பாடும் பெருமை ஏனம்மா?
ஓட்டப் போட்டி கணமொன்றில்
ஒழிந்து போகும் பாரம்மா,
ஆட்டக் காரன் புகழ்சொல்லி
ஆடிப் பாடிக் களியம்மா!
77

சூழ்ந்த கடலின் அலைகளிலே
துரும்பு போலாய்ச் சுழல்கின்றோம்,
ஆழ்ந்து மூழ்கி அதனடியில்
ஆழம் காணச் செல்கின்றோம்,
வீழ்ந்து பின்னர் மணிகளெலாம்
வாரிக் கொண்டு வருகின்றோம்,
வாழ்வி லிங்கே இவையெல்லாம்
விதியின் ஆட்டம் ஆகுமடா!
78

இரந்து நிற்கும் ஏழையினை
அரச ஞகச் செய்திடுவான்,
புரந்து வாழும் அரசனையும்
பிச்சை ஏற்கச் செய்திடுவான்,
அறிந்து கொண்ட 'ஆலிமை'யும்
அறிவில் முட்டாள் ஆக்கிடுவான்,
செறிந்த இறையின் சக்தியினைச்
செப்ப ஆரோ வல்லாரே?
79

பிரிந்து வாழும் மானிடரைப்
பிணைப்பு கொள்ளச் செய்திடுவான்,
பிரியா திருக்கும் நண்பரையும்
பிளவு காணச் செய்திடுவான்,
எரிந்து வீழ்ந்த உடுவையுமே
ஒளிரும் மணியாய் மாற்றிடுவான்,
தெரியா திருக்கும் இறையவனும்
செய்யும் புதுமை சிறிதளவோ?
80

ஆகா எந்தன் யௌவனமே,
அழகார் பருவ வாலிபமே,
வேகும் ஆசைத் தீயினிலே
வார்த்தே எண்ணெய் ஊற்றுமுனல்
ஆகும் பலனே யாதொன்றும்
அடைந்த தில்லை, ஆதலினல்
நோகும் உள்ளத் தால்உன்னைத்
துரத்த எண்ணம் கொண்டேனே! 81

இறந்து சென்ற எம்முன்னேர்
அடக்கம் கண்ட மண்ணில்நாம்
சிறந்து வாழ்ந்து மகிழ்கின்ருேம்,
சிரித்துப் பேசிக் களிக்கின்ருேம்,
இறந்து நாமும் போனபின்னர்
இருந்து வாழ்வார் யார்யாரோ?
பிறந்து வந்து 'கபுரி'ன்மேல்
மனைகள் செய்வார் யார்யாரோ? 82

இன்று புவியை ஆள்கின்ற
அரசர் இறந்து போனதுமே
நன்று நாளை இவ்வுலகைப்
புரக்கும் மன்னர் யார்யாரோ?
குன்றை யொத்த அவர்பெண்ணின்
கொங்கை அணைப்பார் யார்யாரோ?
இன்று மடிந்து சென்றவர்கள்
இன்னும் வந்து மீளுவரோ?
83

அடைந்த பொருளைக் கொண்டுந்தன்
அகத்தை மகிழச் செய்திடுவாய்,
கிடைத்த பொருளை விடுவாயேல்
கிட்டும் வாழ்வும் இழந்திடுவாய்,
கடலின் அடியில் கிடக்கும் ஒரு
கனிந்த சிப்பி தனைஎய்தும்
இடைந்த* துளியை இழந்திடுமேல்
ஒளிரும் முத்தும் கிடைத்திடுமோ?
84

*இடைந்த--இழிந்த;

மறுமை உலகிற் சுவனத்துள்
புகுதும் மக்கள் யாவரிலும்
இரந்து வாழ்ந்த ஏழைகளே
அதிக மாகச் செல்வாரால்,
சிறந்து வாழும் சீமானுய்
தரணி மீது வாழ்ந்திடினும்
இரந்து நிற்கும் ஏழைகளின்
எண்ணம் மனதிற் கொள்வாயே! 85

ஆட்டக் கார இறையவனின்
அழகார் தங்கக் கலசமதை
மூட்டும் உந்தன் மதுகொண்டு
மூழ்க டிக்கச் செய்திடுவாய்,
வேட்டைக் காரன் போலவனின்
மனத்தைக் கொள்ளை இடுவாயேல்
நாட்ட மெல்லாம் நிறைவேறி
நாயன் தோழன் ஆகிடுவாய்! 86

மனமே, நீயும் வருந்துவதேன்?
புலம்பிப் புலம்பி அரற்றுவதேன்
தினமும் இறையைத் 'தஸ்பீ'ஹால்
தியானம் செய்து வாழ்ந்திடுவாய்,
தனமாய்ப் பெற்ற 'தஸ்பீ'ஹைத்
தவறு தென்றும் போற்றிடுவாய்,
நினைவில் தூய்மை சேர்த்திடும் அத்
தியானத் திற்கு நிகருண்டோ?

87

அன்பு செய்யா மானிடரே,
அன்பு செய்யப் பழகுங்கள்,
அன்பு செய்யின் அனைவருமே
அண்டி வாழும் உறவினராம்,
வன்பு செய்யின் உறவினரும்
விரோத முற்ற எதிரிகளாம்,
துன்ப முற்றால் அன்பதனால்
துயரம் நீங்கிச் சென்றிடுமே!

88

அன்பை நாளும் போற்றிடுவீர்,
அன்பால் உலகை வென்றிடுவீர்,
அன்பு நெருப்பில் வீழ்ந்தவொரு
இப்ரா ஹீமாய் மாறிடுவீர்,
இன்பம் சூழ்ந்த சோலையினை
எரியும் கனலிற் கண்டிடுவீர்
துன்பம் தாங்கும் வலிமையினைத்
துய்ய அன்பு தந்திடுமே!

89

அல்லும் பகலும் இறையவனை
அகத்தைக் கொண்டு தொழுதிடுவீர்,
புல்லின் மனமும் வல்லவனைப்
புகழ்ந்து துதித்தல் புரிந்திடுவீர்,
கல்லும் செய்யும் 'தஸ்பீ'ஹைக்
காது கொண்டு கேட்டிடுவீர்,
'கல்'பின் விழிகொண் டல்லாமல்
கண்டு தெளிய எண்ணுதே!

90

எல்லாம் வல்ல இறையவனின்
இனிய அன்பைப் பெறுவதிலே
தொல்லை தரவோ தடையில்லை
தரக ரெவரும் இடையிலில்லை
கல்லா ஏழை மக்களிடை
கபடம் செய்யும் குருமாரால்
வல்ல இறைவன் பேரன்பு
வழுக்கிச் சென்று போய்விடுமோ?
91

வல்லோன் வாழும் மாளிகையின்
வலிய கதவோ தாளின்றி
அல்லும் பகலும் மூடாமல்
அகலத் திறந்து கிடக்கிறதால்
நில்லா உலகின் அற்பசுகம்
நீத்த மக்கள் யாவருமே
எல்லாம் வல்லான் மாளிகையுள்
இணைந்து போதல் சாலாதோ?
92

ஈசன் அடியை எந்நாளும்
　　இனிது போற்றித் தொழுதிடுவீர்,
பேசின் உண்மை, அதுவல்லால்
　　பேசா திருக்கப் பழகிடுவீர்,
மாசு நோக்கி இறையவனை
　　மன்னிப் பருளக் கேட்டிடுவீர்:
தேசு கூட்டும் இறையன்பால்
　　நெஞ்சை ஒளிரச் செய்வீரே!

93

காசு பணத்திற் கொண்டபெருங்
　　காத லோடு பகவானின்
தேசு நிறைந்த பேரன்பைத்
　　தேடி அடைந்தோர் யாரப்பா?
வீசி வீசிச் சுழன்றுவரும்
　　விரைந்த புயலின் காற்றினிலே
தேசு நல்கும் விளக்கின்னும்
　　தொடர்ந்து சோதி தந்திடுமோ?

94

என்றும் இறையை இதயத்தால்
இனிது தொழுது நிற்பீரேல்,
என்றும் ஏழை எளியவருக்
கியன்ற உதவி செய்வீரேல்,
என்றும் உண்மை திறந்துள்ளம்
இனிது சொல்லி வருவீரேல்,
என்றும் இறைவன் காதலராய்
இணைந்து புவியில் வாழ்வீரே!
95

"இறைவன் பண்பை உனக்குள்ளே
இருத்தி வாழச் செய்திடுவாய்,"
மறையைத் தந்த மாநபிகள்
மொழிந்த வார்த்தை இதுவாகும்,
முறையே நீயும் இறையவனின்
பண்பை யெல்லாம் பெறுவாயேல்
கரந்து வாழும் பெய்ப்பொருளைக்
கலந்து நீயும் இறையாவாய்!
96

'நானே இறைவன்' எனச்சொன்னர்
நாயன் தோழர் ஹல்லாஜுூம்
ஏனோ நீயும் இறையவனுய்
ஆதல் முடியா கேட்கின்றேன்,
தானே என்னும் பொருள்கூறும்
தத்து வத்தைப் புரிவாயேல்
தீன முற்ற ஆன்மாவைத்
திருத்தி இறையிற் கலந்திடுவாய்!
97

ஆற்று வெள்ளம் பரவையினை
அடைந்து கடலாய்ப் போனதுவே,
சேற்றில் மலர்ந்த தாமரையும்
சொரிந்து சேருய்ப் போனதுவே,
காற்ருல் வந்த நறுமணமும்
காற்றிற் கலந்து போனதுவே,
போற்றும் அந்த இறையவனைப்
பின்னும் ஏன்நீ கலவாயோ?
98

*ஹல்லாஜ்-: மன்சூர் ஹல்லாஜ்;

மண்ணை விண்ணை வலம்வந்தும்
　　மூழ்கி மூழ்கி ஆராய்ந்தும்
ஒன்றும் இறையைக் கண்டதில்லை
　　என்ற மூடன் யாவனடா?
கண்ணை இழந்த அந்தகனும்
　　கரியைக் காணும் ஆசையினால்
எண்ணி எங்கும் அலைந்திடினும்
　　இனிது தோற்றம் காணுவனோ?
99

மங்கை அவளை எந்நாளும்
　　மனத்தில் இருத்திக் களிகொள்வாய்,
தங்கக் கலசம் போல்மின்னும்
　　தனங்கள் வருடி மகிழ்ந்திடுவாய்,
பங்க மன்ன ஆடைகளை
　　பிய்த்து வகிர்ந்து வீசிடுவாய்,
பொங்கும் இன்ப ஆழியினுள்
　　மூழ்கி அவளைத் தழுவாயோ?
100

மதுவை முதலிற் பருகிவிடு,  
போதை தலையில் ஏறவிடு,  
புதிய யாழின் நரம்புகளைப்  
புரட்டிப் புரட்டி மீட்டிவிடு,  
மிதமாய்ப் போதை ஏறியதும்  
மங்கை அவளைப் பஞ்சணையில்  
இதமாய்க் கிடத்தி இன்பமெனும்  
ஆழி யிலுன்னை ஆழ்த்திடுவாய்! 101

புலம்பி உந்தன் விழிகளினைப்  
புல்லி நிற்கச் செய்திடுவாய்,  
கலங்கி வடியும் கண்ணீரால்  
'*கல்பி*'ன் இருளைக் கழுவிடுவாய்,  
அலங்கு தண்ணீர் ஓடுமிடம்  
யாவும் பசுமை தோன்றிடுமால்,  
இலங்கு தெய்வ அருள்தோன்ற  
இன்னே அழுது புலம்பிடுவாய்! 102

தெய்வ பக்தி கொண்டவனாய்த்
தெளிந்த ஞானப் 'பக்கீ'ராய்
உய்ய வாழ்ந்து வருவாயேல்
உண்மைப் பொருளிற் கலந்திடுவாய்,
வெய்ய கனலும் சுடுமென்று
வெருண்டு கலங்கி நில்லாதே,
தெய்வ மான பொருளைத்தீ
தீண்டிக் கருகச் செய்திடுமோ?
103

சிறையி லுற்ற கிளிபோலாய்ச்
சிக்கி நிற்கும் ஆன்மாவைச்
சிறகை அடித்துச் சுதந்திரமாய்ச்
சிரித்துப் பறக்கச் செய்திடுவாய்,
இறப்பு வந்து நேருமுன்னே
இறப்பைத் தழுவ வேண்டுமெனும்
சிறந்த மொழியைப் புரிவாயேல்
சுதந்தி ரத்தைப் பெறுவாயே!
104

அறிவு கற்ற பண்டிதர்கள்
அவனி மீதிற் றேன்றிலரேல்
அறிவை இழந்து கங்குலினுல்
அவனி சூழ்ந்து நின்றிடுமே,
எறிந்த குப்பை கூழைகளை
இனிது சுத்தம் செய்திடுவோர்
விரிந்த மண்ணில் இல்லையெனில்
வையம் குப்பை ஆகிவிடுமே!

105

உண்ணும் மதுவும், ஒருகலமும்
உயிருக் கினிய ஒருபெண்ணும்
பண்ணும், புதிய யாழொன்றம்
பாரில் யானும் பெறுவேனேல்
மண்ணிற் செய்த மாளிகையும்
மனிதர் மதிக்கும் பெருவாழ்வும்
எண்ணி எண்ணி மனத்தாலும்
என்றும் வேண்டி நில்லேனே!

106

முற்றும்

# பாடல் முதற் குறிப்பு அகராதி

(எண்: பாட்டு எண்)


| | |
|---|---|
| அடைந்த பொருளைக் | 84 |
| அஞ்சேல்! அஞ்சேல்! | 29 |
| அல்லும் பகலும் | 90 |
| அற்ப சுகத்தை | 53 |
| அறிஞர் பலரைத் | 33 |
| அறிவிற் கொண்ட | 34 |
| அறிவு கற்ற | 105 |
| அறிவு கொண்டு | 35 |
| அன்பு செய்யா | 88 |
| அன்பை நாளும் | 89 |
| அன்றென் இளமைப் | 24 |
| ஆகா எந்தன் | 81 |
| ஆட்டக் கார | 86 |
| ஆட்டக் காரன் | 77 |
| ஆசைப் பெண்ணின் | 70 |

| | |
|---|---|
| ஆசை மனத்திற் | 71 |
| ஆளே ஆளைக் | 21 |
| ஆற்று வெள்ளம் | 98 |
| இதய ரோஜா | 66 |
| இரந்து நிற்கும் | 79 |
| இருக்கும் வாழ்வு | 9 |
| இருளின் செல்வி | 2 |
| இறந்து சென்ற | 82 |
| இறைவன் பண்பை | 96 |
| இன்று செய்ய | 45 |
| இன்று புவியை | 83 |
| ஈசன் அடியை | 93 |
| உண்ண உணவும் | 74 |
| உண்ணும் மதுவை | 43 |
| உண்ணும் மதுவும் | 106 |
| உருளும் உலகம் | 12 |
| உலகில் வாழும் | 30 |
| உன்னை யல்லால் | 64 |
| எட்ட நின்ற | 39 |
| எட்டு முழத்தில் | 38 |

| | |
|---|---|
| எண்ணி ஒருதுண் | 19 |
| எண்ணிற் சிறந்த | 11 |
| எல்லாம் வல்ல | 91 |
| என்றும் இறையை | 95 |
| என்னைக் குறைகள் | 57 |
| என்னைப் பார்த்தே | 61 |
| ஏனோ இந்தப் | 32 |
| ஏனோ மனிதா! | 27 |
| ஏற்ற மான | 42 |
| ஓடி ஓடி | 78 |
| ஓடிச் சோர்ந்த | 5 |
| காசு பணத்திற் | 94 |
| காதல் மதுவைத் | 69 |
| கானக் குயிலைக் | 58 |
| கிண்ண மதுவைத் | 62 |
| குன்றி மணியை | 25 |
| குன்றிலிருந்து | 26 |
| கூவும் உங்கள் | 55 |
| சிரிக்கும் ரோஜா | 37 |
| சிறையிலுற்ற | 104 |

சீன அரசின் 18
சூழ்ந்த கடலின் 78
சோர்ந்த நிலையிற் 7
சோலை வனத்திற் 23
ஞானச் சுடரோன் 3
தம்மை மறந்தே 56
திங்கள் வானப் 44
துன்ப முற்ற 31
தெய்வ பக்தி 103
தொல்லை கூட்டும் 36
நண்ணும் உடமை 22
நண்ணும் கவிதைப் 63
நாடும் தெய்வம் 52
நானே இறைவன் 98
நானோ இந்தப் 60
நித்தம் நித்தம் 54
நில்லா உலகில் 17
நெஞ்சே! நீயும் 28
நேற்று வாழ்ந்த 16
பட்டம் ஏனோ 49

| | |
|---|---|
| வல்லான் ஒருவன் | 50 |
| வல்லோன் வாழும் | 92 |
| வாதை நீங்கிச் | 41 |
| வாராய் நண்பா! | 6 |
| வாரி வாரித் | 14 |
| வாழ்ந்து வந்த | 20 |
| வானக் காவின் | 1 |
| விட்டில் தன்னைப் | 72 |
| விரிந்த வையம் | 76 |
| வையம் அழியப் | 46 |
| வையம் இங்கோர் | 73 |

பள்ளி சென்று 51
பானம் பருக 4
பிரிந்து வாழும் 80
புலம்பி உந்தன் 102
பூங்கா வனத்தில் 59
பொன்னை நிகர்த்த 15
போற்றும் உலக 10
மங்கை அவளை 100
மங்கை மதுவின் 66
மண்ணை விண்ணை 99
மதுவை முதலிற் 101
மதுவை விற்கும் 40
மலர்ந்து புதிய 13
மறுமை உலகிற் 85
மனமே! நீயும் 87
முயன்று செய்த 47
மோசம் செய்து 75
மோன நிலையில் 8
வசந்த காலத் 69
வட்ட மதியின் 67

# பிழை திருத்தம்

| பக்கம் | பாடல் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 4 | 8 | 2 | சொன்ற வொரு | சென்றவொரு |
| 8 | 16 | 4 | எம்விடமோ | எவ்விடமோ |
| 13 | 25 | 4 | நின்றேன | நின்றேன் |
| 14 | 28 | 7 | நஞ்ச | நஞ்சு |
| 24 | 48 | 5 | வந்ததுவே | வந்ததுமே |
| 25 | 49 | 4 | நெஞுசத் | நெஞ்சத் |
| 26 | 52 | 2 | ஞானத் | ஞாலத் |
| 29 | 57 | 2 | கிறிதவரை | சிறிதவரை |
| 31 | 61 | 3 | மீன்னும் | மின்னும் |
| 31 | 62 | 8 | கலசம் | கலச |
| 31 | 62 | 8 | நிறைம்யமா | நிறையம்மா |
| 32 | 64 | 8 | நியலவோ | நீயலவோ |
| 34 | 67 | 7 | வெளியின் | வெளியில் |
| 34 | 68 | 4 | தூன்டிற் | தூண்டிற் |
| 38 | 75 | 8 | யாரோ | யாரே |
| 39 | 78 | 6 | வருகின்ருேப் | வருகின்ருேம். |
| 48 | 96 | 7 | பெய்ப்பொருளைக் | மெய்ப்பொருளைக் |

மிக விரைவில் வெளிவருகின்றது!

(1) இந்நூலாசிரியர் எழுதிய

# கவிதாஞ்சலி

என்ற கவிதை நூல்

(2) இந்நூலாசிரியரின்

# இதயக் கதவு

என்ற கவிதை நூலும்

மிக விரைவில் வெளிவருகின்றது.

கவிஞர் அப்துல் காதரின்

மதிப்புரை கொண்டது.